**தலாவ பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 06 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தலாவ பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாகாண இறைவரித் திணைக்களத்திடமிருந்து அனுப்பிய அறிக்கையின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவையாக இருந்த முத்திரைக் கட்டண மீதி ரூபா 2,510,840 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 1,500,000 எனக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் நிலுவை முத்திரைக் கட்டண மீதி ரூபா 1,010,840 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 செப்தம்பர் மாதத்திற்குரிய ரூபா 490,417 ஆன நீதிமன்றத் தண்டப்பண வருமானம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபைக்குச் சொந்தமான LL-7711 ஆம் இலக்க கெப் வண்டி, LL-6932 ஆம் இலக்க டிபர் வண்டி மற்றும் LL-7315 ஆம் இலக்க லொரி பௌசர் ஆகிய வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 258,900 கூட்டுத்தொகையான 04 நிலையான சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,645,956 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,424,473 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வாடகை

சபைக்குரிய கடைகளை வாடகைக்கு வழங்கி பெறவேண்டிய வாடகை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் அறவிடப்படாத காரணத்தினால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 50 கடைகளுக்கான திரட்டிய நிலுவை வாடகை ரூபா 2,847,335 தொகையாக இருந்ததுடன் அப்பணத்தை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதே சபை சட்டத்தின் பிரிவு 159(I) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.2 முத்திரைக் கட்டணம்

(அ) 2009 முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பெறவேண்டிய ரூபா 2,510,840 ஆன முத்திரைக் கட்டண வருமானத்தை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தை கணக்கிட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) தலாவ பிரதேச சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 11 வெற்றிடப் பதவிகளுக்காக பதவியணிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது 22 அமைய மற்றும் ஒப்பந்த ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டமைக்காக மீள்நிரப்பப்படாத சம்பளத்திற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 4,568,485 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 712,923 கூட்டுத்தொகையான சான்றுறுதிப்படுத்தப்படாத 14 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்காக மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 5 சந்தர்ப்பங்களின் போது ரூபா 286,290 ஆன களஞ்சிய வசதிகளுக்காக கொடுப்பனவு செய்யும் போது 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் 115 ஆவது விதியின் பிரகாரம் களஞ்சிய உத்தியோகத்தரால் கொடுப்பனவு உறுதிச்சீட்டு சான்றொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### விளைவற்ற சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமாக காணப்படும் ரூபா 4,278,696 தொகையான 03 வாகனங்கள், பேக்கரி தொகுதி மற்றும் திண்மக் கழிவுப்பொருள் சேகரிப்பு நிலையம் என்பன 5 ஆண்டுகளுக்கு மேலாக எவ்வித பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தலாவ பிரதேச சபையால் தம்மன்னாவெவ இயற்கை பூங்காவொன்றாக அபிவிருத்தி செய்தல் மற்றம் புறநெகும செயற்திட்டத்திற்குரிய இரண்டு உப செயற்திட்ட முன்மொழிவுகளை தயாரிப்பதற்காக சபையின் சேவையில் ஈடுபட்டிருந்த தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் வெளி நபரொருவரைப் பயன்படுத்தி அதற்காக ரூபா 60,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

--------------------------------

ரூபா 1,905,924 மதிப்பிடப்பட்ட பெறுமதியான 17 செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தக்காரர்கள் முன்வராமை மற்றும் மீளாய்வாண்டின் இறுதி வாரத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிலைமையில் செயற்திட்டங்கள் கைவிடப்பட்ட காரணத்தினால் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் மக்களுக்கு கிடைக்க வேண்டியிருந்த வசதிகள் கிடைக்காமல் போயிருந்தன.

**3.5 செயற்திட்ட தாமதம்**

-------------------------------------

மீளாய்வாண்டில் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த ரூபா 1,039,500 பெறுமதியான 03 செயற்திட்டங்களின் நடவடிக்கைகள் 2016 மே மாதம் வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்